முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 831

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.01.2022, வெள்ளிக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
   ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
   வானவர்கள் போற்றும் அன்னதானத்தை
   வையகத்திற்கு வரமாக தந்தருளும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 23ம் நாள், 07.01.2022 வெள்ளிக்கிழமை)
   வரமென அரங்கனை நித்தம் நித்தம்
   வடிவேலன் யான் வடிவமைத்து அருள்புரிய
3. அருளாக அரங்கன் வசிக்கும் அறைக்குள்ளே
   ஆறுமுகன் என் ஞானசக்தி பரிபூரணமாய் நிரம்பி இருக்க
   இருக்கவே அரங்கன் தவ அறைக்குள்ளே
   அகிலத்தார் வந்து செல்லும் கணமே
4. கணப்பொழுதே கந்தவேலன் என் அருட்தயவு
   கலியுகத்தார்க்கு வரமாக கிட்டநேரும்
   நேர்மைகொண்டு அரங்கன் தர்மத்தை
   நீதிமான்கள் ஆக எவர் பொருளுதவி செய்து
5. செய்துகொண்டு அரங்கன் சன்மார்க்கத்தை
   சித்திதரும் உயர்மார்க்கமாகக் கருதி
   கருதி பின்பற்றி தொடருகின்றாரோ கலியுகத்தில்
   அவர்களுக்கெல்லாம் ஞான சித்தி உறுதியாகும்
6. தானதர்மபலத்தோடு அரங்கஞானி தவபலத்தை
   தீட்சையாக பெற்ற மக்களுக்கு
   வானவர்கள் இடத்திலும் நற்பேரு கூடி
   வையகத்தில் வாழுங்காலமே ஞானிகளாகி சிறக்க நேரும்
7. நேர்மைபட அரங்கன் தர்மவழியை
   நிலவுலகம் ஏற்று வருகவருக
   பெருகிவருகின்ற பேரிடரும் ஒழிந்து
   பேருலகமே பாதுகாப்பு மேன்மை காணும்

   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–